Muruganaik Kuppittu Muraiyitta Perukku
Mutriya Vinai Theerume

Muruganaik

Udal Patriyap Pini Arume
Vazhkkai Mutrilume Nalam Petru Inidhura
Meththa Inbam Serume-Appan

Muruganaik

Kumaranaik Kumbittuk Kondaduvorukku
Kuraigal Yavum Pogume
Avar Kudumbam Thazhaiththongkume
Sura Samara Velayudham Pakkath Thunai Kondal
Sagala Bayam Neengkume-Aiyan

Muruganaik

Arumuganai Vendi Aradhanai Seydhal- Muruga
Arugil Odi Varuvan
Anbu Perugi Arul Purivan
Andhak Karunai Uruvana Guruparan
Endrume Kaividamal Aluvan-Appan

Muruganaik

Kandhanai Enniye Vandhanai Seyvorkku
Kariyam Kaikudume Pagai Mari Uravadume
Siva Maindhan Arulale Meyyarivundagi
Menmai Uyarvagume-Aiyan

Muruganaik

Lyrics in Tamil

முருகனைக் கூப்பிட்டு முறையிட்ட பேருக்கு
முற்றிய வினை தீருமே

முருகனைக்

உடல் பற்றியப் பிணி ஆறுமே
வாழ்க்கை முற்றிலுமே நலம் பெற்று இனிதுர
மெத்த இன்பம் சேருமே-அப்பன்

முருகனைக்

குமரனைக் கும்பிட்டுக் கொண்டாடுவோருக்கு
குறைகள் யாவும் போகுமே
அவர் குடும்பம் தழைத்தோங்குமே
சூர சமர வேலாயுதம் பக்கத் துணை கொண்டால்
சகல பயம் நீங்குமே-ஐயன்

முருகனைக்

அறுமுகனை வேண்டி ஆராதனை செய்தால்-முருகா
அருகில் ஓடி வருவான்
அன்பு பெருகி அருள் புரிவான்
அந்தக் கருணை உருவான குருபரன்
என்றுமே கைவிடாமல் ஆளுவான்-அப்பன்

முருகனைக்

கந்தனை எண்ணியே வந்தனை செய்வோர்க்கு
காரியம் கைகூடுமே பகை மாறி உறவாடுமே
சிவ மைந்தன் அருளாலே மெய்யறிவுண்டாகி
மேன்மை உயர்வாகுமே-ஐயன்

முருகனைக்